இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 81 – ஒலி : 295– திருவள்ளுவர் ஆண்டு 2054 – வைகாசி 22– திங்கள்கிழமை 05 ஜூன் 2023 – சென்னை 10 பக்கங்கள் Established:10.8.1942 - Volume:81 - Issue 295:Thiruvalluvar Year - 2054 - Vaikasi 22 - Monday 05 June 2023 -Chennai 10 Pages ₹ 5.00

## விபத்துக்குக் காரணமானவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்!

# தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் யாரும் பாதிக்கப்படவில்லை!

## ஒடிசாவில் மீட்புப் பணிகளைப் பார்வையிட்டு சென்னை திரும்பிய அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேட்டி !



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (04.06.2023) முகாம் அலுவலகத்தில், ஒடிசா சென்று திரும்பிய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சந்தித்து, இரயில் விபத்து நடந்த பாலசோரில் மேற்கொள்ளப்பட்டு வரும் பாதுகாப்பு நடவடிக்கைகள், மீட்புப் பணிகள், மருத்துவமனைகளில் சிகிச்சை அளிக்கப்படுவது மற்றும் பயணிகள் இரயில் மூலம் சென்னை திரும்புவதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்த விவரங்களைத் தெரிவித்தார். உடன் போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் உள்ளார்.

**சென்னை, ஜூன் 5-**

**ஒடிசாவில் ஏற்பட்ட கோர ரயில் விபத்தில் மீட்புப் பணிகளை பார்வையிட்டு சென்னை திரும்பிய அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் "தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் யாரும் பாதிக்கப்பட வில்லை" என்றும், விபத்துக்குக் காரண மானவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கூறினார்.**

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (04.06.2023) மாலை, சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியின் போது குறிப்பிட்டதாவது:—

ஒடிசா இரயில் விபத்தில் காயமடைந்த தமிழ்நாட்டைச் சேர்ந்த பயணிகளுக்கு தேவையான மருத்துவம் மற்றும் இதர உதவிகளைச் செய்திடவும், முதலமைச்சர் அவர்கள் என்னையும், அமைச்சர் அண்ணன் சிவசங்கர் அவர்களையும், அரசு அதிகாரிகளையும் உடனே செல்லச் சொன்னார்கள். நாங்கள் நேரடியாக, சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்று அருகில் இருக்கின்ற மருத்துவமனைக்குச் சென்றிருந்தோம். அங்குதான் அனுமதிப்பட்டிருப்பதாகச் சொல்லியிருந்தார்கள். அங்கு சென்று ஆய்வு செய்ததில் யாரும் அனுமதிக்கப்படவில்லை. அதன் பிறகு உடல்கள் ஏதாவது வைக்கப்பட்டிருக்கிறதா என்று mortuaryக்கு அழைத்துச் சென்றார்கள்.

அங்கேயும் நாங்கள் சென்று விசாரித்தோம். அங்கும் தமிழர்கள் யாரும் இல்லை. அதன் பிறகு அங்கிருக்கக்கூடிய அரசு அதிகாரிகளுடன் ஆய்வு செய்தோம். தமிழர்கள் யாரும் பாதிக்கப்பட வில்லை என்று சொன்னார்கள். அதன் பிறகு நம் முதலமைச்சர் அவர்களுடன் Zoom call–ல் பேசும் போது, கோரமண்டல் விரைவு இரயிலில் முன்பதிவு செய்த 127 பயணிகளில் 28 பேர் தமிழர்கள் என்று சொன்னார்கள். நாங்கள் இன்றைக்கு மதியம் 1.30 மணிக்கு அந்த ஆய்வில் ஈடுபட்டிருந்தோம்.

ஒடிசா அரசு அங்கு இதற்காக பிரத்யேகமாக அழைப்பு மையம் (call centre) போன்று ஏற்பாடு செய்திருக்கிறார்கள், உதவி மைய தொடர்பு எண்ணும் கொடுத்திருக்கிறார்கள். அங்கும் சென்று நாங்கள் கேட்கும்போது, அங்கேயும் உதவி மையம் எண்ணையும் கொடுத்திருக்கிறார்கள். தமிழர் காணவில்லை என்பது போன்ற எந்தவிதமான ஒரு அழைப்பும் வரவில்லை என்று சொன்னார்கள். 8 பேரை மட்டும் தொடர்பு கொள்ள முடியாமல் இருந்தது. இப்போது சமீபத்தில் எங்களுக்குக் கிடைத்த கணக்குப்படி, அங்கு இருக்கக்கூடிய அரசு அதிகாரிகள் எங்களுக்குத் தெரிவித்திருப்பது என்னவென்றால், அதில் 2 பேரை trace செய்துவிட்டதாகவும், காலையில் பெயர்களைக் கொடுத்திருந்தோம், பத்திரிகைகளில் வந்திருந்தது.

இன்னொரு பயனாளி ஜகதீசன் அவர்களிடமும் பேசுவிட்டோம், அவரும் பாதுகாப்பாக இருக்கிறார். மீதமுள்ள 6 பயணிகள் அருண், கல்பனா, கமல், மீனா, ரகுநாதன், கார்த்தி ஆகியோர் எல்லோருமே பாதுகாப்பாக இருக்கிறார்கள் என்று உடன் சென்ற பயணிகள் இரயில்வே காவல் துறையிடம் சொல்லி, இரயில்வே காவல் துறையினர் நமக்குச் சொல்லியிருக்கிறார்கள். அவர்களுடைய Coach எண். D3, D4, D7, D9, S1, S2 ஆகியவற்றில் பயணித்தவர்களுக்கு பாதிப்பு எதுவும் கிடையாது. இது உடனிருந்த பயணிகள் கொடுத்திருக்கக்கூடிய செய்தி.

நம்முடைய அரசு அதிகாரிகள் இன்னும் அங்குதான் தங்கியிருக்கிறார்கள். இன்னும் சிறிது நேரத்தில் இன்னும் நல்ல செய்திகள் வரும் என்று நம்புகிறேன்.

**கேள்வி:—** *கமல் இரயிலில் பயணிக்கவில்லை என்று சொல்கிறார்களே?*

**அமைச்சர் உதயநிதி ஸ்டாலின்:** அப்போது பாதுகாப்பாகத்தானே இருக்கிறார்கள். பாதுகாப்பாகத்தான் இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள்.

### விபத்தைத் தவிர்த்திருக்க முடியும்!

**கேள்வி:** *எந்த மாதிரியான ஆலோசனை மேற்கொண்டீர்கள்?*

**அமைச்சர்:-** இந்த 28 பேரில் 21 பேரிடம் பேசிவிட்டோம். 7 பேரை மட்டும் trace செய்ய முடியாமல் இருந்தது என்ற சந்தேகம் இருந்தது என்று தெரிவித்தோம். இங்கேயே இருந்து எல்லோரும் பாதுகாப்பாக இருக்கிறார்களா என்று பார்த்துவிட்டு வாருங்கள் என்று சொன்னார்கள். இப்போது சிறிது தெளிவு கிடைத்திருக்கிறது. ஒடிசா அரசு அந்த 275 நபர்கள் இறந்திருப்பதாகக் கண்டறிந்து இருக்கிறார்கள். அதையும் அவர்கள் அதிகாரப்பூர்வமாக (official) வெளியிட்டிருக்கிறார்கள். உயிரிழந்தவர்களின் புகைப்படங்களை அவர்கள் netல் போட்டு, 'யாராவது வாருங்கள், வந்து அடையாளம் காட்டுங்கள்' என்று சொல்லியிருக்கிறார்கள். அதில் 88 பேர்தான் இப்போது வரைக்கும் அடையாளம் காணப்பட்டுள்ளனர். மற்றவர்களை அடையாளம் காண்பதற்கு அவர்கள் காத்திருக்கிறார்கள். அதிலும் இன்றைக்கு காலையில் அந்த புகைப்படங்களையும்ட எடுத்துப் பார்த்தோம், மிகவும் வருத்தமாக இருக்கிறது. மீதமுள்ள 6 நபர்களிடமும் பேசிவிட்டோம் என்றால், தமிழ்நாட்டிலிருந்து யாருமே பாதிக்கப்படவில்லை என்ற ஒரு முடிவிற்கு வரலாம்.

### தொழில் நுட்பங்கள் இருந்தும் விபத்து நடந்தது துயரமானது!

இந்த விபத்தைத் தவிர்த்திருக்கலாம். மிகவும் வருத்தமாக இருந்தது. ஒன்றிய அரசு, எதனால் இந்த தவறு நடந்தது என்பதைக் கண்டுபிடித்து தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மறுபடியும் இதுபோன்ற தவறுகள் நடக்கக்கூடாது.

நேற்று நம்முடைய துணைப் பொதுச் செயலாளர் ராஜா அவர்கள் பேசும்போது கூட சொல்லியிருந்தார்கள், தொழில்நுட்பம் இவ்வளவு வளர்ச்சியடைந்த காலத்தில் இவ்வளவு பெரிய விபத்து. அதைக் கண்டிப்பாக தவிர்த்திருக்க வேண்டும். சரியான நடவடிக்கை எடுப்பார்கள் என்று நான் நம்புகிறேன்.

### வேதனையான அனுபவம்!

**கேள்வி:** *ஒடிசா முதலமைச்சருடன் நீங்கள் ஆலோசனை நடத்தியிருந்தீர்கள், அது குறித்து....*

**அமைச்சர்:** நேற்று நிலவரப்படி 8 நபர்கள் trace செய்ய முடியாமல் இருந்ததால் இறந்தவர்களுடைய உடலை புகைப்படம் எடுத்து உடனே கொடுங்கள். அதை நாங்கள் எங்களுடைய அரசுக்கு அனுப்பி எங்களால் trace செய்ய முடியுமா, தமிழ்நாட்டு மக்கள் யாராவது பாதிக்கப்பட்டிருக்கிறார்களா என்று கேட்டோம். அவர்கள் முழு ஒத்துழைப்பு கொடுத்தார்கள். ஒடிசா அரசு சிறப்பாகச் செயல்பட்டிருக்கிறது.

தொடர்ச்சி 2 ஆம் பக்கம்

## ஒடிசா ரயில் விபத்து: மீட்புப் பணிகளை விரைவுபடுத்தச் சென்ற

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின்- எஸ்.எஸ்.சிவசங்கர் நிலைமையை விளக்கினர்!

### ஒடிசா சென்று திரும்பிய அமைச்சர்கள் தம்மைச் சந்தித்த பின் – முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப்பதிவு!

சென்னை, ஜூன் 5–

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று மாலை விடுத்த ட்விட்டர் பதிவில், "ஒடிசாவில் மீட்புப் பணிகளை ஒருங்கிணைத்து விரைவுபடுத்த அனுப்பப்பட்ட அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், எஸ்.எஸ். சிவசங்கர் ஆகியோர், "இந்த விபத்தில் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் யாரும் உயிரிழந்ததாக இதுவரை செய்திகள் வரவில்லை" என்று தெரிவித்தனர் என்று குறிப்பிட்டுள்ளார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வலைதளப் பதிவு வருமாறு:

**ஒடிசா ரயில் விபத்தில் தமிழ்நாட்டைச் சேர்ந்த பயணிகளின் நிலையை அறிந்து, அவர்களை மீட்கும் பணிகளை ஒருங்கிணைத்து விரைவுபடுத்தவும், அவர்களுக்கு உரிய சிகிச்சை அளிக்கப்படுவதைக் கண்காணிக்கவும் அமைச்சர்கள் உதயநிதி ஸ்டாலின், எஸ்.எஸ்.சிவசங்கர் ஆகியோர் தலைமையில் உயர் அதிகாரிகள் கொண்ட குழுவினை ஒடிசா செல்ல உத்தரவிட்டிருந்தேன்.**

**அவர்கள் இரு நாட்களாக அங்கு தங்கியிருந்து, விபத்துக்குள்ளானோர் அனுமதிக்கப்பட்டிருந்த மருத்துவமனை, பலியானோர் உடல்கள் வைக்கப்பட்டிருந்த வளாகம் உள்ளிட்ட பகுதிகளில் ஆய்வு செய்தனர்.**

**ஒடிசா மாநில முதலமைச்சர் அவர்களையும், அதிகாரிகளையும் சந்தித்து தமிழ்நாட்டைச் சேர்ந்த பயணிகளின் நிலையை அறிந்தனர்.**

**இதனிடையே, மாநிலக் கட்டுப்பாட்டு அறைக்கும், தங்கள் உறவினரையோ நண்பரையோ தொடர்பு கொள்ள முடியவில்லை என யாரும் தகவல் தெரிவிக்கவில்லை.**

**இந்நிலையில், இன்று சென்னை திரும்பிய அவர்கள் என்னைச் சந்தித்து, மீட்புப் பணிகள் குறித்த விவரங்களைப் பகிர்ந்ததோடு, இந்த விபத்தில் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் யாரும் உயிரிழந்ததாக இதுவரை செய்திகள் வரவில்லை என்று தெரிவித்தனர்.**

இவ்வாறு ட்விட்டர் பதிவில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் குறிப்பிட்டுள்ளார்.

## பீகாரில் புதிதாகக் கட்டப்பட்டு வரும் பாலம் இடிந்து விழுந்தது!

*பாட்னா: மே 5 -*

*பீகார் மாநிலத்தில் கங்கையின் குறுக்கே புதிதாகக் கட்டப்பட்டு வந்த பாலம் இடிந்து விழுந்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இது குறித்த வீடியோவும் இணையத்தில் வேகமாகப் பரவி வருகிறது.*

*இந்தியாவில் உள்கட்டமைப்பை மேம்படுத்த மத்திய மாநில அரசுகள் பல்வேறு திட்டங்களைக் கொண்டு வந்து கொண்டிருக்கிறது. கிராமங்களையும் நகரங்களையும் இணைக்க புதிய உள்கட்டமைப்புகள் தொடர்ந்து உருவாக்கப்பட்டு வருகிறது.*

*குறிப்பாகப் பல இடங்களில் புதிய சாலைகள் அமைக்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் கனெக்டிவிட்டி அதிகரித்து கிராமங்களும் வேகமாக வளரும் ஒரு வாய்ப்பு ஏற்படுத்தித் தரப்படுகிறது.*

*இதற்கிடையே பீகார் மாநிலத்தில் கட்டப்பட்டு வந்த புதிய மேம்பாலம் ஒன்று அப்படியே இடிந்து விழுந்த ஷாக் சம்பவம் நடந்துள்ளது. நேற்று ஞாயிற்றுக்கிழமை பீகாரின் பாகல்பூர் என்ற இடத்தில் தான் இந்தச் சம்பவம் நடந்துள்ளது.*

*அங்கே புதிதாகக் கட்டப்பட்டு வந்த மேம்பாலம் திடீரென இடிந்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இதை அங்குள்ள சிலர் தங்கள் கேமராவில் பதிவு செய்துள்ளனர். பாலத்தின் இரண்டு பகுதிகள் ஒன்றன் பின் ஒன்றாக அடுத்தடுத்து இடிந்து விழுவது அதில் பதிவாகியுள்ளது.*

*இந்த அகுவானி சுல்தங்கஞ்ச் கங்கை பாலம் பீகார் மாநிலம் ககாரியா என்ற இடத்தில் ரூ.1,700 கோடி செலவில் கட்டப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. ககாரியா, அகுவானி மற்றும் சுல்தாங்கஞ்ச் ஆகிய பகுதிகளை இணைக்கும் வகையில் கங்கை நதியில் இந்த பாலம் கட்டப்பட்டு வருகிறது. முன்னதாக இரண்டு ஆண்டுகளுக்கு முன்பும் இதேபோல பாலத்தின் ஒரு பகுதி இடிந்து விழுந்து இருந்தது.*



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (04.06.2023) ஒடிசா மாநிலத்தின் சிறப்பு நிவாரண ஆணையர் அலுவலகத்தில் நடைபெற்ற மீடபுப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டத்தில் கலந்துகொண்டு தமிழ்நாட்டைச் சேர்ந்த பயணிகளின் மருத்துவ உதவி மற்றும் மீட்புப் பணிகள் குறித்து ஒடிசா மாநிலத்தின் தலைமைச் செயலாளர் பிரதீப் குமார் ஜெனா அவர்களுடன் கலந்தாலோசித்தார். இந்த ஆய்வுக் கூட்டத்தில், போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், போக்குவரத்துத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் க.பணீந்திர ரெட்டி, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் குமார் ஜயந்த், ஒடிசா மாநிலத்தின் வளர்ச்சி ஆணையர் மற்றும் கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி அனு கார்க், பொதுத் துறை முதன்மைச் செயலாளர் திருமதி சித்ரா ஆறுமுகம் மற்றும் ஒடிசா மாநில உயர் அலுவலர்கள் உள்ளனர்.

## முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாப் பொதுக்கூட்டம்!

### ஜூன் 7 அன்று நடைபெறுகிறது!



**முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளான ஜூன் 3 அன்று நடைபெறுமென்று அறிவிக்கப்பட்டு ஒத்திவைக்கப்பட்ட, "கலைஞர் நூற்றாண்டு விழாப் பொதுக்கூட்டம்" ஜூன் 7 — புதன்கிழமை அன்று நடைபெறுகிறது என்று தலைமைக் கழகம் அறிவித்துள்ளது!**